மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No.105/2022**

2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி புதன்கிழமை

பி.வா.சா.1 (அழகச்சி)

கு.வி (3ம் பிரதிவாதி தரப்பில்)

பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணமானது ராக்கம்மாள் என்பவர் நாகம்மாளுக்கும் அய்யமாளுக்கும் எழுதிகொடுத்த ஆவணம் என்றால் சரிதான்.

பி.வா.சா.1 (அழகச்சி)

கு.வி(வாதி தரப்பில்)

வாதிகள் எனது அண்ணனின் வாரிசுகள் என்றால் சரிதான். மார்க்கண்டேயனுக்கும் ராக்கம்மாளுக்கும் பாத்தியப்பட்ட பொதுசொத்துக்கள் மேலராங்கியம், அம்பலத்தடி, மாங்குடி, விருதுநகர் மாவட்டம் பூம்பிடாரி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் பாகவிஸ்தி செய்யவில்லை என்றால் சரியல்ல. பாகவிஸ்தி ஏற்படுத்திய பத்திரம் யார் யாருக்கு எந்தெந்த சொத்துகள் என ஆவணங்கள் ஏற்பட்டு அந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ராக்கமாளுக்கு பாத்தியப்பட்ட பாகம் பிரிக்கப்படாத சொத்து, சர்வே எண்.135/5, மார்க்கண்டேயனுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.194/7 மருதாயிக்கு பாத்தியப்பட்ட சொத்து மருதாயி என்பவர் எனக்கு தானசெட்டில்மெண்ட் கொடுக்கவில்லை கிரையம் கொடுத்துள்ளார். 5ம் பிரதிவாதிக்கு பாகம் பிரிக்கப்படாத சர்வே எண்.127/3ஏ கிரையம் செய்து கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான். சித்தப்பா சூரனுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.183/8, 137/15, 155/18, 115/18, 1ஏ, 1பி, 199/1சி ஆகிய சொத்துக்கள் ஆதியில் மார்க்கண்டேயனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் இருவருக்கும் பாத்தியப்பட்ட சொத்து. மேற்படி சர்வே எண்களின் ஆவணங்கள் அனைத்தும் நீதிமன்றத்தில் வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்துள்ளோம் என்றால் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.7 பதிவில்லா கிரைய அவணம்

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, பதிவு கிரைய ஆவணம். பி.வா.சா.ஆ.7ல் கண்ட சொத்தை எனது தாத்தா அழகர்அப்பன் அம்பலம் காலத்திலிருந்தே விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 பாகப்பரிவினை பத்திரம் ஆரம்பத்தில் மாாக்கண்டேயன் அம்பலம் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.11 ஆவணப்படி ஆரம்பத்தில் மார்க்கண்டேயன் பெயரில் இருந்து வந்தது என்றால் சரிதான். ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டதால் இவ்வழக்கில் என்னுடைய எதிர்வாதம் நிராகரிக்கக்கூடியது என்றால் சரியல்ல. வாதி கோரிய பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை